அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

எல்லாம் செயல் கூடும்

# தீபநெறி

தீபம் 7 நெறி 11 | தமிழ் மாத இதழ் | விலை ₹1 | ஜூன் 2017

பட்டினியில்லா...
நோயில்லா...
குற்றமில்லா...

வளமிக்க
வையகத்தை
வார்த்தெடுப்போம்!



கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே...


எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க !!!

# வாழ்த்துகின்றோம்...



இனிய இல்லற வாழ்வில் அடியெடுத்து வைத்திருக்கின்ற தீபத்தின் ஆடுகின்ற சேவடி
தயவு. ஈரோடு திருப்பதி தம்பதியினரை தீபம் வாயார வாழ்த்துகின்றது.

## " தீபநெறி " ஆசிரியர் குழு




**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர்
கைபேசி : 95518 49757



அன்பின் பிடியுள்
**அர. இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
தொலைபேசி :04172 273293
கைபேசி : 80564 38488



இலக்கியச்செல்வர்
**இளந்தேவன்**
அய்யப்பந்தாங்கல்
கைபேசி : 99400 92876



வள்ளலார் சிற்றடியேன்
**குருபக்கிரிசாமி**
ஆசிரியர் – அருட்சுடர்
வடலூர்
94428 12844



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி இதழ்
கைபேசி : 94440 73635



தருமம்

# தீபநெறி தொண்டர்களின் தினசரி தியானம்

ஆக்கம்
திரு. கே.என். உமாபதி அவர்கள்,
கே.கே. நகர்



தவம்



1. அறியாமை அடியோடு அகலட்டும்!

2. ஆன்ம நேயம் ஆல்போல் தழைக்கட்டும்

3. இல்லாமை இல்லாமல் புதையட்டும்!

4. ஈவது இயல்பாய் இருக்கட்டும்!

5. உயிரிரக்கம் எங்கும் தழைக்கட்டும் !

6. ஊக்கமுற்று யாக்கைகள் ஒளிரட்டும்!

7. எல்லா உயிர்களும் இன்புற்று வாழட்டும்!

8. ஏற்றத்தாழ்வு இடருற்றுப் போகட்டும்!

9. ஐம்பூதங்கள் மாசுபடுவதைத் தடுக்கட்டும்!

10. ஒன்றே இறையென உணர்த்தட்டும்!

11. ஓயாமல் வையகத்தில் அருட்பா ஒலிக்கட்டும்!

12. ஔடதமாம் அருட்பெருஞ்ஜோதி அற்புதங்கள் நடத்தட்டும்!

**தருமம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!**

நித்ய தீப தருமச்சாலை எண்.7/8 புத்தேரிக்கரை தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை– 600 042.

# ஏற்றுக் கொள்ளுங்கள் பெருமானே

“ஏதாகுமோ என எண்ணி நான் இசைத்தவெல்லாம் வேதாகமம் என்றே தன் மேலணிந்தான்...” என “பாமாலையை ஏற்றல்” என்ற தலைப்பில் மூன்றாவது பாடலாக வள்ளலார் எழுதுகிறார். தான் இயற்றிய பாடல்களை இறைவன் எப்படி ஏற்பாரோ என்றும் “ஏதாகுமோ” என்று பயத்துடன் எண்ணிய நேரத்தில் அவைகளை எல்லாம் வேதாகமம் என்றே தன்மேல் அணிந்தான் என்று களிப்புற்று நமக்கு அறிவிக்கிறார். நமக்கு அறிவிக்கப்பட்ட பாடலுக்கு இலக்கண வரம்புக்கு உட்பட்டு உரை கூற முனையலாம். அதை ஏற்பதும், விடுப்பதும், குற்றம் காண்பதும் கூட இலக்கண மரபில் அடங்கும். அதன்படி...

நூலுக்கு உரை கூறும் வகையாவன : பாடம், கருத்துரை, வகுத்துரைத்தல், பொருளுரைத்தல், தொகுத்துரைத்தல், உதாரணம் காட்டல், வினாவுதல், விடை கூறல், விசேடங் கூறல், வேற்றுமை தொகை விரித்தல், அதிகாரத்தோடு பொருந்த உரைத்தல் துணிந்து இதற்கு இதுவே பொருள் என உரைத்தல், பயனுரைத்தல், ஆசிரிய வசனங் காட்டல் ஆக 14 வகை என்று சொல்கிறது நன்னூல் பாயிரம்!

நன்னூல் பாயிரத்தின்படி

அதிகாரத்தோடு பொருந்த உரைத்தல் : இதே பாமாலையை ஏற்றல் அதிகாரத்தின் ஐந்தாவது பாடலில் முன்பாட்டுக் காலையிலே (தான்) வந்து கருணையளித்தே தருமச்சாலை வா என்றான். (தான்) என்பதை பார்க்கும் போது - என்னையும் உன்னையும் இணைப்பது பாடல் தானா? இதைப் பல்லாயிரம் பேர் செய்து விட்டனர். அது நம்மை இணைக்காது, என்னையும் உன்னையும் தயவுதான் இணைக்கும். எனவே தயவு(ச்சாலை) வழியாக, தருமச்சாலை வழியாக ‘வா’ என்பதாக பொருள் கொண்டால்

வினாவுதல் : வேதாகமம் என்றே தன்மேல் அணிந்தவன் என்பது ஒரு சாதாரண நூலோடு ஒப்பிட்டதைப் போல் உள்ளதே, இது சரியா?

விடை கூறல் : யான் பாட அவர் திருத்திய மேலான அருட்பா பாடலை சாதாரண நூலோடு ஒப்பிட வேண்டாம்.

விசேடங் கூறல் : ஆகம முடிமேல் ஆரண முடி மேல் என்ற அகவல் வரிப்படியும், நீண்ட மறைகள் ஆகமங்கள் நெடுநாள் முயன்று வருந்தி நின்று வேண்ட அவைகட்கு ஒரு சிறிதும் விளங்கக் காட்டாது... என்ற அடைக்கலப் பதிக வரிகளின்படியும் வேதாகமங்கள் தூரத்தில் நின்று கண்டனவே தவிர கொண்டதில்லை. வருந்தி நின்றனவே தவிர அணியப்படவில்லை. எனவே வேதாகமம் என்றே தன்மேல் அணிந்தான் என்பது யாதாக இருக்குமெனில்,

துணிந்து இதற்கு இதுவே பொருள் : என்னும் நன்னூல் நியதிப்படி “வேதாகமம்” என்றா தன்மேல் அணிந்தான்? வாய்ப்பில்லை! அவைகள் வெளியில்தான் நின்றன. திருவருட்பா

பாடல் மேலானது. வேதாகமங்களுடன் வெளியே வரிசையில் நிற்கலாம் என்று எண்ணிய தருணத்தில் இறைவன் தன் கரம் நீட்டி திருவருட்பா பாடல்களை தானே எடுத்து தன்மேலணிந்தான் எனக் கொள்வதே சரியானது.

ஆகம மென்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் முதலெழுத்துக்களாலான வார்த்தையேயாம். பதி நூல், பசு நூல், பாச நூலின் ஆதாரமிது. வேதாகமங்களைக் கற்ற மக்கள் (பசுநிலையாய் காட்டப்பட்ட உயிர்கள்) இதை எதற்காக கற்றோம் எனத் தெரியாமல் (கற்ற பசுக்கள் கதறித் திரியினும் - திருமந்திரம் 2015) ஜீவன்முத்தி, காயசித்தியுடன் நின்றனரே தவிர இறவாமையும், ஐந்தொழில் ஆளுமையும் அவைகளில் இல்லை.

வள்ளலார் எழுதி நமக்குக் கிடைத்த 5817 பாடல்களும் இறைவனால் அணியப்பட்டவைகளே என்பதற்கு பாமாலை ஏற்றல் பதிகம் சாட்சி. வள்ளலார் திருவாய் மலர்ந்து முதன்முதலாகப் பாடியதே தெய்வமணி(ந்த) மாலை தானே! அந்த மாலையிலுள்ள மலர்களில் ஒவ்வொன்றாய் பார்க்கும் போது எவ்வளவு நுட்பங்கள்?

“உலகுயிர்த்திரளெலாம் ஒளி நெறி பெற்றிட இலகும் ஐந்தொழிலையும் யாம் செயத் தந்தனை” என வள்ளலார் தாம் பெற்ற பெரு வாழ்வை எழுதி ஒன்றரை நூற்றாண்டுகள் ஆகப் போகிறது. இன்னும் ஒருவர் கூட ஒளிநெறி பெற்றதாக செய்தியில்லை. அருட்பாவை படிக்க அமரும்போதெல்லாம் “இறவாவரம் நீர் ஏன் பெற மாட்டீர்” என்ற கேள்வியை பெருமானார் நம்மைப் பார்த்து கேட்கிறார். இந்த விஷயத்தில் தற்போது நம் நிலைப்பாடு என்ன?

திருவருட்பாவிற்கு சில நூறு பேர் உரையெழுதிவிட்டனர். பல்லாயிரம் பிரதிகள் விற்பனையாகிவிட்டது. பல லட்சம் பேர் “கசடறக் கற்று” புத்தக ஞானம் பெற்று அத்துடன் நின்று விட்டனர். “அதற்குத்தக” நடைமுறைப்படுத்த நாட்டம் கொள்ளவில்லை. அது அவ்வளவு எளிதான குறிப்பாகத் தெரியவில்லை. காரணம்

ஒழுக்கமில்லை

“ஒருமையுடன்” என்று எழுதினீரே பெருமானே! அதற்கு தயவு வரவேண்டும் என்றும் எழுதினீரே. அது எனக்கு வரவே இல்லை. ஊன் உருக மறுக்கிறது. உள்ளொளி என்பதை கிஞ்சித்தும் அறியாத நான் அதைப் பெருக்க முயற்சிப்பது எப்படி?

ஆன்ம உருக்கம் எனக்கு அரைக்கண நேரம் கூட இதுவரை அனுபவத்தில் வரவில்லை. எனவே “ஆன்ம ஒழுக்கம்” என்றீரே அதன் வழி ஒழுக அருகதையில்லாமல் அழுகிறேன்!

“உத்தமர் தம் உறவு வேண்டும்” என்றீரே பெருமானே! உடல் பொருள் ஆவியனைத்தும் பிறருக்கே என அர்ப்பணிப்பவர்தானே உத்தமர். இவ்வுலகில் அப்படிப் பலர் இருக்கின்றனர். ஆனால், எனக்கு எல்லாம் தெரியும். எனக்கு மட்டும் மரணமே வராது

என்னும் நிலைப்பாட்டில் நான் இருப்பதால் உத்தமர் உறவால் எனக்கு என்ன பயன் ஏற்பட்டுவிடப் போகிறது என்ற மமதையில் இருக்கிறேன். என் ஆன்மா கடைத்தேற வேண்டுமென்பதில் என் ஜீவனுக்கே விருப்பமில்லை. அப்படியிருக்கும் போது என் ஜீவன் பிற ஜீவன்கள் மீதான தயவுடன், "ஜீவ ஒழுக்கத்துடன்" வாழ முடியாமல் நடைமுறையில் அது துவக்கப்படவேயில்லை என்பதை நன்கு உணர்ந்து அழுகிறேன்!

"மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்" என்றீரே பெருமானே! எனது குழந்தை குட்டிகள் பள்ளியிலோ, பணியிலோ சேரவேண்டுமெனில், மதம், சாதிகளை அதற்கான படிவத்தில் எழுதிப் பதிவு செய்ய வேண்டியது கட்டாயம். மதமான பேயை நான் பிடித்தே ஆகவேண்டியுள்ளதே பெருமானே! அன்றாட நிகழ்வில் ஒன்றாக ஐநூறு பேர் மதக் கலவரத்தால் இறந்தனர் என்பதைக் காணும்போது வேறு மதத்தவர்தானே என சாதாரணமாகப் பார்க்கிறேனே! அவர்களும் மனிதர்கள் தானே அய்யோ பாவம் என என் கரணங்கள் சுட்டிக் காட்ட மறுக்கிறதே, எனக்கு "கரண ஒழுக்கம்" எப்படி வரும் எனத் தெரியாமல் தேம்பி அழுகிறேன்!

"நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்" என்றீரே பெருமானே! ஒரு நகரில் ஐந்து மாடியும் அதற்கு மேலும் கொண்ட கட்டடங்கள் ஆயிரம் இருந்தால் அதில் ஒரு நூறாவது மருத்துவமனைகளாகத்தானிருக்கும். உடலைப் பாடாய்ப்படுத்தி பணம் சம்பாதித்ததால் உடல் கெட்டு அதற்கு அறுவை சிகிச்சை, மருந்து, மாத்திரையுடன் வாழ முற்பட்டு அப்பணம் முழுவதும் செலவிடும் உலகில் வாழ்கிறேனே! "இந்திரிய ஒழுக்கம்" இருந்திருந்தால் மருந்து, மாத்திரை தேவையில்லைதானே. ஆனால் மருந்து மாத்திரை விழுங்கி காலந்தள்ளும் எனக்கு இந்திரிய ஒழுக்கமும் இல்லையே என அழுகிறேன்!

சமரசமில்லை

சித்தர்கள், யோகிகள், ஞானிகள் எல்லாம் மதம் பொய் என்றனரே. பெருமானாரும் விண்ணப்பத்தில் "சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள் செய்" என இறைவனைக் கேட்டாரே தவிர மக்கட்கு உணவு, உடை, இடம், செல்வம் தா எனக் கேட்கவில்லையே. அவர் சொல்லி 150 ஆண்டுகள் ஆகிவிட்டனவே! வாக்குப்பதிவு எந்திரங்களில் NOTA என்ற ஒன்றை புகுத்த முடிந்ததே - அதைப் போல விண்ணப்பப் படிவகங்ளில் மதம் என்ற இடத்தில் பெருநெறி (BIG PATH) என்று எழுதும் உரிமையை ஏன் பெற முயலவில்லை. கெசட்டில் வெளிவரும் மதம் சாதிப் பட்டியலில் - பெரு நெறி - சாதி மதத்தை விரும்பாதவர் என்ற நிலைப்பாட்டை இதுவரை ஏன் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. சமரசம் என்பது விட்டுக் கொடுத்தலில் தொடங்குகிறது. நாங்கள் விட்டுக் கொடுக்கிறோம் சாதி மதம் வேண்டுவோர் வைத்துக் கொள்ளட்டும். சமரச சன்மார்க்கம் என்பதை – சமரசம் என்னும் வார்த்தையை Letter Padகளில் தான் பார்க்கிறோம்.

இதைத்தான் "உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்பதாக ஒன்பது வயதில் பாடிய வள்ளலார் பின்னாளில் அப்படி என் மக்களை

விட்டுவிடக் கூடாது என்று எண்ணி "அகத்தே கருத்து புறத்தே வெளுத்திருந்த மாந்தரை சகத்தே திருத்த வருவிக்கவுற்றேன்" என்கிறார். கருணையின் உச்சமல்லவா இது! இப்படிப்பட்ட அதீத நுட்பங்களை யெல்லாம் அருட்பாவில் காட்டியிருப்பது தெய்வமணி மாலையிலேயே தொடக்கி எங்களை பிரமிக்க வைக்கிறீரே!

எட்டு வயது முடிந்தபின் பாடிய முதல் மாலையில் எட்டாவது பாடல் "ஒருமையுடன்" என ஆரம்பிக்கிறதே அது எங்கள் அறிவுக்கு எட்ட இன்னும் பல்லாண்டுகள் ஆகலாம். சிறுநெறி, பொய்நெறி, இருள்நெறி, மீட்டும் வருநெறி போன்றவை நீங்கி, செந்நெறி, கொல்லாநெறி, குருவருள் நெறி, தெருள்நெறி, அருள்நெறி, உறுநெறி, இனிப்பிறவாநெறி, என்பெருநெறி, இறவா நெறி, ஒளிநெறி என்றெல்லாம் நீங்கள் எழுதிய நெறிகளை அவ்வப்போது தாங்கி வெளிவரும் "தீபநெறி" என்னும் இதழை எட்டாண்டுகட்கு முன்பு துவக்க அருள் செய்தீரே! அது எதிர்வரும் மாதத்தில் ஒன்பதாவது அகவையில் அடியெடுத்து வைக்க இருக்கிறது. அதில் வரும் கட்டுரைகள், ஜீவகாருண்ய செயல்பாடுகளின் புகைப்படங்கள், நித்யதருமசாலை, நடமாடும் தருமச்சாலை, பல ஊர்களில் பசி தவிர்த்தலுக்கு துணைக்கரம் நீட்டுதல், கல்வி உதவி, மருத்துவ உதவி, பேரிடர் கால உதவி போன்ற பலவும் கண்ணியமிக்க நன்கொடையாளர்களால், கண்மணிகளாய் ஒளிரும் தன்னலமற்ற இளைஞர்களின் சேவைகளையும், தாங்கி வெளிவரும் "தீபநெறி" இதுவரை வெளியிட்ட 96 மலர்களையும் இனி வரப்போகும் மலர்களையும் தங்கள் திருவடிக்கல்லவா சமர்ப்பிக்கிறோம். அவைகளை தயை கூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள் பெருமானே!

**கே.என். உமாபதி**
கைபேசி : 95518 49757

---

# தீபநெறி

தீபநெறி இதழ் குறித்த தங்களின் கருத்துக்களை, மேலான ஆலோசனைகளை, கட்டுரை ஆசிரியர்களுக்கு கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கலாம்.

## விளம்பரங்களில்லா, விலையில்லா மாத இதழ்

## தீபநெறி மாதஇதழ்

தங்களின் நலம் விரும்பிகளுக்கு அனுப்ப / பெற / நிறுத்த
முகவரி மாற்றம் தெரிவிக்க **9444073635** என்ற எண்ணுக்கு
**முகவரியை SMS / WhatsApp செய்யவும்.**

# நித்ய தீப தருமச்சாலை

**கடந்த 8 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, 17 தருமச்சாலைகள் மூலம்**

# அன்னம் பாலிப்பு




**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து**
**நீங்களும் அருளின்பம் பெற வாருங்கள்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 17 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ. 17, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 1,70,000/- |

**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும்:**

## 94440 73635 / 2244 2515

Donations may be sent by crossed cheque to :

## Deepam Trust

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch, DEEPAM TRUST**
**Current A/c. No. : 30265475129 / IFSC Code : SBIN0001055**

**தீயினில் சூட்டியல் சேர்தரச்செலவு இயல்**
**ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (432)**

# தீபம் அறக்கட்டளையின் சார்பில் நடந்த கோடைகால நீர் மோர் பந்தல் நிறைவு விழா காட்சிகள்















தீயினில் வெண்மைத் திகழ்இயல் பலவா
ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (434)

**திரு அருட்பிரகாச வள்ளல் பெருமான் வடலூரில் தருமச்சாலை ஏற்படுத்தி**
**150 ஆண்டு நிறைவுப் பெற்றதால் 151-ம் ஆண்டு துவக்க விழா**
**சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் நடைபெற்ற அற்புத காட்சிகள்.**
**இடம் : நித்ய தீப தருமச்சாலை / நாள் : 25.05.2017.**









**தீயிடை பூஎலாம் திகழ்உறு திறம்எலாம்**
**ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (436)**

# நித்ய தீப நடமாடும் தருமச்சாலை










சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில், தினசரி நித்ய தீப நடமாடும் தருமச்சாலை வாகனம் மூலம் நூற்றுக்கணக்கானவர்களுக்கு பசியாற்றுவித்தல்.

தீயிடை ஒளியே திகழ்உற அமைத்து அதில்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி (438)

# அரியும் சிவமும் இணைந்த அரிசி தானம்...



# 'அரிசி தருமம்' - அன்பான வேண்டுகோள்!

ஆன்மநேய ஒருமைப்பாட்டுள்ளம் கொண்ட அன்பு சகோதர, சகோதரிகளுக்கு, சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் இனிய வந்தனங்கள் பல. நமது தீபம் அறக்கட்டளையின் சார்பில் தயாள உள்ளம் கொண்ட தங்களின் பேராதரவினால் கும்பகோணம், கொஞ்சிமங்களம், இருங்கூர், சோழிங்கநல்லூர், ஈரோடு உட்பட 17 தருமச் சாலைகள் இயங்கி வருகிறது.

தீபம் அறக்கட்டளையின் சார்பில் இயங்கி வரும் தருமச்சாலைகள் மூலம் தினசரி காலையில் ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு கஞ்சி வார்த்தலும், மதியம் பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு பசியாற்றுவித்தலும் நடைபெற்று வருகிறது. தயாள உள்ளம் கொண்ட தங்களின் பெருந் தயவினாலும், வள்ளல் பெருமானின் பெருங் கருணையினாலும் 10-ம் ஆண்டை நோக்கி மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும், தங்கள் குடும்பத்தினரும், நண்பர்களும் பங்கு பெற்று கிடைப்பதற்கரிய உன்னதமான ஆன்மநேய அறப்பணிகளுக்கு அரிசி, பருப்பு, மற்றும் மளிகைப் பொருட்கள் போன்ற பொருட்களை அருளாக மாற்றியும், நிதியை மதியாக மாற்றியும், வாரி வழங்கி, எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பெருங்கருணையில் தாங்களும் பாகம் பெற தங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

**மாதந்தோறும் தேவைப்படும் அரிசி : 100 மூட்டைகள்.**

**தொடர்புக்கு : 94440 73635 / 97894 94009**

தீயிடை அருநிலை திருநிலை கருநிலை
ஆய்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி (440)

**வேளச்சேரியில் புராதன சிறப்புமிக்க தண்டீஸ்வரர் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு தீபம் அறக்கட்டளையின் சார்பில் 6000 அன்பர்களுக்கு அன்னம் பாலித்த காட்சிகள்.**

**நாள் : 14.06.2017**







## குற்றம் ... தண்டனை???

குற்றவியல் கற்றவனல்ல நான் - குற்றம் சுமத்திட உதவும் சட்டப்பிரிவுகளின் நுணுக்கங்கள் அறிந்தவனுமல்ல. அவற்றை ஆழ்ந்து நோக்கி, ஆய்வு செய்திடும் முயற்சியுமல்ல நமது நோக்கம்.

குற்ற உணர்வே சிறிதும் இன்றி, குற்றங்களைத் தொடர்ந்து செய்து கொண்டு கம்பீர உலா வந்து கொண்டிருக்கிறோமே - இது பற்றி சிறிது சிந்திப்போமா?

இதுவா குற்றம்? என்று சொல்வது மட்டுமல்ல, இது குற்றமே இல்லை என உறுதியாக நம்பிக் கொண்டு, குற்றம் செய்வோர், செய்து கொண்டே இருப்பவர் நம்மில் பலர்.

அபகரிப்பு, ஆக்கிரமிப்பு, அபரிமித சொத்துக்குவிப்பு என்பவையெல்லாம், தங்களது தனிப்பெருந்திறனாக எண்ணி, பெருமிதத்தில் மிதந்து கொண்டிருப்போர் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். அவர்களைப் பற்றி சிந்திப்பதையே தவிர்ப்போம்.

புலியைப் பார்த்து பூனையும் சூடு போட்டுக் கொண்ட கதையாக, சொற்ப காலத்தில், சொற்ப உழைப்பில், சொர்க்க போகம் அனுபவித்திடும் ஆசையில் தலைவரைத் தொடரும் தொண்டர்களும் ஏராளம். ஒரு பெருமூச்சோடு இவை பற்றிய எண்ணங்களை நிறுத்திக் கொள்கிறேன்.

குற்றம் எனத் தெரியாமலே, அல்லது உணராமலே குற்றங்களைச் செய்து கொண்டிருக்கும் பெரும்பான்மையினர் பற்றியது தான் இன்றைய சிந்தனை.

நீங்களும் நானும் அடிக்கடியோ, அனுதினமோ, செய்து கொண்டிருக்கும் குற்றங்கள் ஏதாவது நினைவிற்கு வருகிறதா?

பதிவு செய்வதற்கோ, புகார் அளித்திடவோ, உகந்ததாகவே கருதப்படாமல் பகிரங்கமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்ற குற்றங்களைத்தான் "உங்கள் சிந்தனைக்குச் சமர்ப்பிப்பது" இக்கட்டுரையின் நோக்கம்.

இதுவா குற்றம்?

என் பணம், என் மகிழ்ச்சி, என் சுதந்திரம் என்று தன்னையே ஏமாற்றிக் கொண்டு, மது அருந்துவோர் நம்மில் 60 விழுக்காடு என்கின்றனரே! இது பகிரங்க குற்றமில்லையா? என் மனைவி - என் குடும்பம் - என் குழந்தைகள் - நான் அடிப்பேன், அணைப்பேன், இது என் சொந்த விஷயம் என்று மனைவியையும், குழந்தைகளையும் நையப்புடைப்போர் 20 சதவிகிதம் என்கின்றனரே! இது வருந்துதற்குரிய குற்றமில்லையா?

கடமை ஆற்றிடவே கையூட்டு - கோடிக்கணக்கில் சுருட்டுகின்ற ஒரு சிலரை சுட்டிக்காட்டிக் கொண்டே, நான் ஏதோ கொஞ்சம் வாங்குவது குற்றமா? என்கிற மனோபாவம் ஏறத்தாழ எல்லோரிடமும் பற்றிக் கொண்டதே! இது குற்றமில்லையா? தன்னூண் பெருக்கற்கு, தயக்கம், தயை, இரக்கம் சுரக்காமல் நம் எதிரில் நடமாடிக் கொண்டிருக்கும் உயிர்களைக் கொன்று தின்கிறோமே? புலைத் தொழில் ஒரு பெருந்தொழிலாகவல்லவா இயங்கிக் கொண்டிருக்கிறது.

சாலை விதிகளை மதியாமை, குறுக்குவழிகளில் தனது காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளுதல், பகட்டான, படோடோபமான பட்டாடை பல இலட்சம் பட்டுப்பூச்சிகளின் மறுவடிவம் என்ற உண்மை அறியாமை என எழுதிக் கொண்டே போகலாம்.

பட்டியலை மேலும் நீட்டாமல் இங்கேயே நிறுத்திவிடுகிறேன். படிப்பதை நீங்களும் நிறுத்திவிட்டு, கொஞ்ச நேரம் அசைபோடுங்கள் - சிந்தியுங்கள்.

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. (திருக்குறள்)

என்னென்ன குற்றங்களை, குற்றம் என எண்ணாமல், குற்றம் என ஏற்கவும் மறுத்து நாம் செய்து கொண்டிருக்கிறோம் என அடையாளங்காண முயற்சியுங்கள்.

குற்றமிழைப்பதை பிழைப்பாகக் கொண்டவர்கள் நமக்கு முன்மாதிரியாக வேண்டாம், அவர்கள் குற்றங்களைச் சுட்டிக் காட்டி நான் செய்வது மிகச் சிறிய பிழை என சமாதானப்படுத்திக் கொள்ளாதீர்கள்.

ஒரு உண்மை நிகழ்வை பகிர்ந்து கொள்கிறேன்.

நபிகள் நாயகம், ஸல் அவர்கள் ஒரு நாள், அவர் வசித்துக் கொண்டிருந்த ஒரு பகுதியிலிருந்து, வேறொரு பகுதிக்கு நடைப்பயணமாகச் சென்று கொண்டிருந்தாராம். பாலைவனப் பிரதேசமல்லவா? வழியில் ஒரு இடத்தில் ஒரு முதியவர் பேரீச்சம்பழம் விற்றுக் கொண்டிருந்தார். இரண்டு காசுகளை அவரிடத்தில் கொடுத்து பேரீச்சம்பழம் தருமாறு கேட்டார். அந்த முதியவரோ, ஸல் அவர்களின் நற்பண்புகளை - நற்குணங்களை நன்கு அறிந்தவர். நல்ல வாய்ப்பு கிடைத்தது என மகிழ்ந்த அந்த பேரீச்சம்பழ முதியவர் இரட்டிப்பு மடங்கு பழங்களை ஓலையில் கட்டி ஸல் அவர்களிடம் அளித்தார். சிந்தனை வயப்பட்டிருந்த ஸல் அவர்கள், முதியவர் கொடுத்த பொட்டலத்தைப் பெற்றுக் கொண்டு நடையைத் தொடர்ந்தார். சிறிது தூரம் சென்றதும் ஓரிரண்டு பழங்களைச் சுவைக்கலாம் என்று பொட்டலத்தைப் பிரித்தார். அதிர்ச்சியுற்றார்.

நான் கொடுத்ததோ இரண்டே காசுகள். இவ்வளவு பழங்களா? ஏன்? நான் நிறைய காசு கொடுத்ததாக எண்ணிவிட்டாரோ அந்தப் பெரியவர் - பாவம்! இவ்வளவு பழங்களை நான் ஏற்பது தகாது என எண்ணியவர், திரும்பி நடந்தார். முதியவரைக் கண்டார்.

நான் கொடுத்தது இரண்டு காசுகள் தானே?
தெரியும் ஐயா என்றார் முதியவர். முழுமலர்ச்சியோடு.

நீங்கள் அன்பளிப்பாகக் கொடுத்தாலும், இரண்டு காசுகளுக்கு உரியதைப் பெறுவதுதான் சரி. அதிகப்படியான பழங்களைப் பெற்றுக் கொள்வது குற்றம். உங்கள் அன்பிற்கு நன்றி என்று கூறி அதிகப்படியான பழங்களைத் திருப்பிக் கொடுத்து விட்டு திரும்பி நடந்தாராம் ஸல்.

குற்றம் எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறது. புரிந்ததா?

நமது அன்றாடச் செயற்பாடுகளில், இத்தகு குற்றம் எங்கே ஒளிந்து கொண்டு நம்மை சராசரி மனிதனாகவே வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை அடையாளங் காண கொஞ்சம் முயற்சி மேற்கொள்வோம். குற்றம் களைவோம். பிறர் குற்றம் காண்பதைத் தவிர்ப்போம்.

இங்கேதான், நாம் வள்ளலார் செய்த புரட்சியினை சமூக மனநலனை உயர்த்திடும் உன்னத காரியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்பும் பணிவுமே நமது வெளிப்பாடாக இருக்க வேண்டும். சீற்றத்தின் சிறு சாயல்கூட நமது பேச்சிலோ, செயலிலோ, ஏன் எண்ணத்திலோ கூட இல்லாமல் வாழ வேண்டும்.

ஒட்டுமொத்த சமுதாய முன்னேற்றத்திற்காக முன் வைக்கப்படுகிற கருத்து. பேச்சு - திட்டம் தான் புரட்சிகரமானதே தவிர, புரட்சி பற்றிய இன்றைய புரிதலோ, கோஷமோ புரட்சியே அல்ல.

வானவீதியிலே உலா வருவதும் - தொண்டர்கள் தரையில் தவழ்வதும், வள்ளல்களாக விளம்பரப்படுத்திக் கொள்வதும் மக்களை கையேந்துபவர்களாக வைத்து, திருப்தியோடு இருப்பதாக பெருமிதம் கொள்வதும் புரட்சி அல்ல.

தண்டனை!!! தண்டனை தான் தீர்வா?

இல்லை. இல்லவே இல்லை. இங்கேயும் ஒரு புரட்சிகரமான நல்ல திருப்பம் தேவை. இதை முன்னெடுத்தவர் வள்ளலார்.

அவர் எதிர்பார்த்த - எடுத்துரைத்த வழிகாட்டுதல்களை முழுமையாக நாம் புரிந்து கொள்ளவுமில்லை. நடைமுறைப்படுத்திட முனையவுமில்லை.

ஓரிரு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே திருப்தி கண்டு அடுத்தநிலை நோக்கிப் பயணிக்காதவர்களாகவே இருக்கிறோம்.

நமது அடையாளம் “காருண்யம்”, நமது அடையாளம் “ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்வது”. நமது அடையாளம் “தயவு”.

தீயைத்தீயால் அணைக்கவே இயலாது. தண்டனையால் தண்டிக்கிறேன் என்று எத்தனை ஆண்டுகள் - எத்தனை கோடிகள் - எத்தனை உழைப்புகள் வீணாகிக் கொண்டிருக்கின்றன.

நியாயம் காணாமல் போய்விடக் கூடாதே என அஞ்சி அதனை பாதுகாத்திட நமது நீதிமன்றங்கள் அரும்பாடுபடுவதுதான் இன்றைய அவலம்.

அரசை வழிநடத்த நீதிமன்றங்கள். தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தாத அரசு. இப்படி ஒரு சமுதாயத்தில் “தண்டனை” தீர்வை அளித்திடுமா?

என்னதான் தீர்வு? சன்மார்க்கம் பெருகுவதுதான் தீர்வு.

தென்னாப்பிரிக்காவில் அண்ணல் காந்தி இருந்தபோது, அவரை விரும்பாத சில கொடியவர்கள் கற்களால் அடித்து காயப்படுத்தினர். அவரைக் காப்பாற்றி பாதுகாப்பாக இல்லம் சேர்த்த ஒரு போலீஸ் உயர் அதிகாரி, காந்தி, இந்தக் கலகக்காரர்கள் மீது வழக்குத் தொடர விரும்புகிறீர்களா? நானே சாட்சியம் சொல்வேன் என்றாராம். காந்தி சொன்னாராம். வழக்குத் தொடர்வதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. வன்மம் கூடும். அவர்களே மனம்திருந்தி எனக்கு உதவுவார்கள் என்றாராம்.

சிலுவையில் அறையப்பட்ட போது ஏசுவும், அறியாமையால் இவர்கள் எனக்கு தீங்கு செய்கிறார்கள். மன்னித்தருளுங்கள் பிதாவே என்றாராம்.

உறுதியாக ஒரு விரதம் மேற்கொள்வோம்.

குற்றங்காணல் - குறை சொல்லல் - கோபங்கொள்ளல் இவைகளை அறவே தவிர்த்து ஒரு பத்து நாட்கள் வாழ்ந்து பாருங்கள். உங்களை விரும்புவோர் எண்ணிக்கை கூடும். உங்கள் உற்சாகம் மிகும். உள்ளம் திண்மை பெறும்.

“ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்தல்தான்” அறவழி - அதுவே நம்வழி.

**இலட்சுமணசாமி**

இராணிப்பேட்டை / 8056438488

# அருட்பெருஞ்சோதி அகவல்

### அனுபவப் பொருள் விளக்கம்

## திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

### 15. சுத்த சன்மார்க்க வெளி

29. சுத்தசன் மார்க்க சுகத்தனி வெளியெனும்
30. அத்தகை சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

(உ–வி) மேலே குறிக்கப்பட்ட தனிவெளியேதான் இங்கு சுத்த சன்மார்க்க வெளியாகப் பேசப்படுகின்றது, அந்த வெளிநிலை அருட்பெருஞ் ஜோதி கொண்ட ஆன்ம சிற்சபையேயெனத் தெளிவு செய்யப்படுகின்றது, இங்கிருந்துதான் சுத்த சன்மார்க்கமாம் பெருநெறி திறக்கப்படுகின்றது, மற்றெல்லா உலகச் சமய மத நெறிகள் யாவும் வேறு வேறு வெளிநிலைகளிலிருந்து ஆக்கப்பட்டிருக்கின்றனவாம், உலகநெறிகள் தோன்றிய வெளிகள் யாவை எனில், இந்திரியவெளி, கரணவெளி, ஜீவவெளி, ஆன்மவெளியாம். இவற்றுள் ஜீவ ஆன்மவெளி நின்று தோன்றியவை அகச் சமயமாகிய சைவம் வைணவம் முதலியனவாம். இந்திரிய கரண வெளிகளினின்று தோற்றுவிக்கப்பட்டவைகளே புறச்சமயங்கள் யாவுமெனலாம், பின்னுற்ற சிலர், நம் அகச்சமய உண்மையைப் போற்றிக் கொண்டு, இதினின்று ஓரளவைத் தமது நெறியில் ஏற்றிக் கொண்டுள்ளனராம். இந்த உண்மைகள் எல்லாம் இன்றைய மக்கள் சமுதாயத்திற்கு விளங்குகின்றன இல்லை. அப்படி உண்மை அறியவேண்டுமானால், ஒவ்வொருவரும் சுத்தசன்மார்க்க நிலைக்கு ஏறிவர வேண்டும். இவ்வாறாக (உலோபத்தன்மையற்ற, தயவுத்தன்மை நிறைந்த) சுத்த சிவ சன்மார்க்கத்தில்தான் எல்லா உண்மையும் உள்ளவாறு விளங்கும். அவ்வுண்மை கொண்டு உலவா, இன்ப வாழ்வு பெறலாம்.

நம் ஆன்ம வெளிநிலைக்குமேல் அருட்பெரு வெளி விளங்குகின்றது, அகச் சமயநெறியின் அந்தத்திலுள்ள இவ் அருள்வெளியைப் புறத்திருந்து பாவித்தவர்களுக்கு அந்நிலை கிட்டவில்லை. அவர்கள் ஐயமுற்று புறநின்று ஒழிந்தார்கள், அந்நெறிகளுக்கு முற்றிலும் வேறானது நமது சுத்த சன்மார்க்கம். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல்தான் பலரும் இதனை (சுத்த சன்மார்க்கத்தை) அவற்றோடு (பிற நெறிகளோடு) வைத்து மதிப்பிட்டும், ஒப்பிட்டும் பழமையின் விளைவு தான் இதுவென்றும், சிறந்த அப்பழநெறிகளைக் கைவிட்டு இப்புதுநெறியை மேற்கொள்ளுவதால், சமய மதங்களே அழிந்து. மக்களினமே கெட்டு ஒழிந்து போகும் என்றெல்லாம் கூச்சலிடுகின்றார்கள், அப்பழமை விரும்பிகள். உண்மையில் இவர்கள் தம் கொள்கைகளைக் கைவிடுவது, தாம் மேற்கொண்டிருந்தது மூடமென்றாகிவிடும் என்றும், தம் கௌரவம் போய் விடுமென்றும், தமது பிழைப்புக்கே ஆபத்து நேர்ந்துவிடும் என்றும்தான் இப்போது இப்பொது நெறியைக் காணவும் அஞ்சுகின்றார்கள்! அவ்வளவும் அறியாமையேயாம். நம் நெறியால் எல்லோருக்கும் "பெருநலம்" உண்டாவது நிச்சயம். பழையவற்றின் முடிந்த லட்சியங்களும், அவற்றிற்கெல்லாம் மேலான பேரின்ப லட்சிய வாழ்வும் சித்திப்பது திண்ணம். ஆகையால் எல்லோரும் இந்தச் சுத்த அருட்பொது நெறியைக் கைக்கொண்டு உய்யலாம், ஆகவே ஈண்டு இச்சுத்த சன்மார்க்கத்தை நன்கு புரிந்து ஏற்றுக் கொள்வோமாக!

எங்கும் பரிபூரணமாய் என்றும் திகழ்ந்து கொண்டு அருட்பெருஞ்ஜோதியாய் விளங்குகின்ற ஆண்டவரை மெய்யருள் அறிவாலே நமது ஆன்ம சிற்சபையில் தான் காணவேண்டியிருக்கிறது. பிற எவ்விடத்தும், எக்காலத்தும், எதனாலும் எல்லாம் வல்லபதியைக் கண்டு கொள்ளவே முடியாது! ஆகையால் தயவோடு, சத்விசார வசத்தராய், ஒருமை மனத்தால், புருவ நடுவுட் புகுந்து, சிற்சபையை அடைந்து அதுவாகி நிற்கப் பழகுதல் வேண்டும். புல நெறியில் மயங்கி புறத்துழலும் மக்களுக்கு இது கடினமாக இருக்கலாம்.

என்றாலும், தயாநன் முயற்சி செய்யின் திருவருளே முன் நின்று கூட்டி வைக்கும். இவ்வக அம்பலத்தே பொருந்தி நின்று புற வாழ்வில் விருப்பு வெறுப்பின்றி, சூழ் உலகில் ஜீவ விளக்க ஞான விளக்கப்பணி புரிந்து கொண்டு சுத்த இன்பானுபவத்தில் திகழ்வதே இந்நெறியின் குறிக்கோளாம். இதுதான் சுத்த சன்மார்க்க இயல் என்றும், அனகநெறிமுறை என்றும் தெளிதல் வேண்டும். இதனால் உலகில் அருள் ஒளியின் கீழ் மக்கள் சமுதாயம் முழுமையும் நல்லின்ப வாழ்வில் தழைத்தோங்கும்.

## சுத்த சன்மார்க்கம்

(தனியொரு சிறப்புக் கட்டுரை)

உண்மை எல்லாம் காணவல்லது மக்களினம். அப்படி உண்மைகண்டு வெளிப்படுத்தின உயர் அறிவுடையவர்களே மக்களிற் சிறந்த பெரியோராகப் போற்றப்படுகின்றனர். அவர்கள் கண்ட மெய்ப்பொருளை அல்லது கடவுளை மக்கள் சமுதாயம் அறிந்து, அடைந்து, ஆனந்திக்க வேண்டுமென்று கருணையுள்ளங் கொண்டு வழிவகை செய்து கொடுத்தனர். அவ்வழிமுறைகளே சமயமத மார்க்கங்களாம்.

மக்களின் உள்ளப்பண்பாடும், அறிவு ஆற்றலும், செயல் திறனும் ஒன்று போலில்லாது பதைரப்பட்டனவாயிருக்கின்றன. ஆகையால் அவரவர்களின் இயல்புக்கு ஒத்தபடி நெறிமுறைகள் தொகுக்கப்பட நேர்ந்துள்ளனவாம். அந்நெறிமுறைகள் நான்காய் உள்ளனவாம். அவை நான்கும் கீழிருந்து ஏறிச் சென்று கடவுளை அடையும் முறையாகும். அவை சரியை. கிரியை. யோகம். ஞானம் எனவும், தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் கூறப்படும். ஞானசன்மார்க்க நிலை கடவுளோடு கூடி ஒன்றிடச் செய்வதாம்.

சன்மார்க்கம் என்பதன் பொருள் விளக்கம் : சத்துமார்க்கமே சன்மார்க்கமாம். சத்தாவது, நித்தியமாய், இயற்கையுண்மைப் பொருளாய், எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் உள்ள கடவுள் நிலையைக் குறிப்பதாம். அந்தச் சத்துப் பொருளை அடையும் நெறியே சன்மார்க்கம் எனப்படுகின்றதாம். இச்சன்மார்க்கம், புறநிலை நின்று கடவுளை நோக்கிச் சென்று அடையும் நெறியாக இருக்கின்றது. கடவுள், எவ்வுயிர்க்கும், எப்பொருட்கும் அகம்புறம் எங்கும் நிரம்பியுள்ளவரே எனினும் ஒருவனுடைய அகமாகிய ஆன்மாவில் தான் மெய்யறிவாகிய ஞானக்கண்ணுக்கு வெளிப்பட்டு, தன் நிறை நிலையை எங்கும் நிரம்பியதன் வடிவைக் கண்டு கொள்ளச் செய்கின்றார். இந்த ஆன்மாவில் தோன்றிய கடவுட் சத்துண்மை வடிவை ஒருமையாற் பற்றி நின்று ஒன்றித்துப் போவதுவே சன்மார்க்க முடிவாகக் கொள்ளப்பட்டது. இந்த அளவு உண்மைகூட விளங்காத பலவாகிய புறநெறிகளால் பெறப்படும் தெய்வநிலை அடைவு மிகக் குறைவுடையதேயாம். மேலும் இந்த அகப்புற நெறிகள் யாவும் குறிப்பிட்ட ஓர் ஒரு பிரிவினர்க்கே உரியதாய்க் கொள்ளப்படுவதால், பொது மக்கட் சமுதாயத்திற்கு ஒருமைப்பாட்டு உரிமை வாழ்வுக்கு வழி ஏற்படவில்லை. மேலும் கடவுள் ஒருவரே சத்தாய் இருப்பதும், சித்தால் தேகாதி பிரபஞ்சம் யாவுமாய் விளங்குவதும், மனிதனின் அகத்தே வெளிப்பட்டு, நிறை இன்பில் நிலவச் செய்வதுமாயுள்ளாராம். ஆகையால் எவன் ஒருவன் இந்தச் சச்சிதானந்தப் பதியைத் தன்னகத்தே கண்டு அதுவாகி விடுகின்றானோ அவனே கடவுணிலை எய்தியவனாகக் கருதப்பட்டது.

மேற்குறிக்கப்பட்ட சன்மார்க்கத்தால் மனிதன் கடவுள் உண்மையை அகமிருந்து கண்டுகொண்டது சரியே. ஆனால், அந்தக் கடவுள் ஒருவரே தன் அருட்சித்வசத்தால் ஒவ்வொருவரின் ஆன்ம வண்ணமாயிருந்து, அவரவரின் உயிர், உடல், வாழ்வுமயமாய் வெளிப்படுவதும், ஒடுங்குவதுமாயுள்ளாராம். ஆகையால் உண்மையில் ஒன்றான கடவுளேதான் தன் அருட்சித்தால் நாம் ஒவ்வொருவருமாய் விளங்குகின்றதை அருளால் உணர்கின்றோம்.

எனவே கடவுள் ஒருவரே அழிவற்ற, மாற்றமில்லாத அகவடிவோடும், மாற்றமும் மறைவும் அடைகின்ற பலவாகிய புறவடிவங்களோடும் விளங்குகின்றதே உண்மையாம். இவ்வுண்மையை அறிந்து கொள்ளாமல் தான் மனிதன் தன்னை அழிவடிவினனாகவும், கடவுளை மட்டும் நித்திய வடிவினராகவும் கொண்டிருந்தான். அதனால் கடவுளை அடைய, புற நிலையை விட்டு அகத்தே சாரவேண்டியவனானான் அதற்கான மார்க்கமும் அப்படி தோற்றுவிக்கப்பட்டிருந்ததாம். இப்பொழுது உண்மையை உள்ளவாறு கண்டு கொண்டதால், நாம் கடவுளை இயல்பாகவே, அத்துவிதமாகக் கொண்டு விளங்குவதாய் உணர்கின்றோம். இவ்வுணர்வு விளங்குவதற்கென்றே நம் அகமுடையானின் அருட்சித்துச் செயலாய் நம் இந்த மனித உடல் விளங்குகின்றதையும் அறிகின்றோம். இதனால் இதுவரை நாம் அழிபடும் தேகபோக வாழ்வில் உழன்று கொண்டிருந்ததை விட்டு விட்டு, அழிவற்ற கடவுளான்ம நிலையிலிருந்து கொண்டு, கடவுளரின் அருளால் அருட்சித்துச் செயலோடு வாழ வேண்டியிருக்கின்றதாம்.

இந்த அகமிருந்து வாழும் அருட்பெரும் வாழ்வுதான் சுத்தசன்மார்க்கத்தால் வழங்கப் பெறுகின்றோம் இன்று. இப்பொழுது சன்மார்க்கத்திற்குப் பொருள் இதுதான் : சத்து சித்து ஆனந்தமான கடவுள்தான் நமது உண்மையாகவும் இருக்கின்றதால், இதனை நன்கு உணர்ந்து கொண்டு, இதுவாக நிலைத்திருந்து கொண்டு, இதுவான நிறை இன்ப வாழ்வில் என்றும் திகழ்வதே பொருந்தும். சுத்தம் என்பது யாதொரு கலப்புமற்ற சச்சிதானந்த அருட்பெருஞ் ஜோதிக் கடவுளைக் குறிப்பதாம். அந்த அருட்பெருஞ்ஜோதிபதியின் வண்ணமாய்க் காட்டிக் கூட்டி வாழ்விக்கின்ற நெறிமுறையே இங்கு சுத்தசன்மார்க்கமாக மொழியப்படுகின்றது. ஆகவே, இச் சன்மார்க்கத்திற்கும், முன்னோர் கண்டிருந்த சன்மார்க்கங்களுக்கும் உள்ள உண்மை வேறுபாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும் யாவரும்.

### சுத்த தயவு நெறி

நமது சுத்தசன்மார்க்கத்தை இப்பொழுது சுத்த தயவுநெறியாகக் கொள்ள நேருகின்றது. இத்தயவு நம் சச்சிதானந்த பதியின் உண்மையையே சுட்டுகின்றதாய்க் கண்டு கொள்ளுகிறோம். ஆதலின் சுத்த சன்மார்க்கத்தில் இதன் விரிபொருள் விளக்கம் எவர்க்கும் எளிதில் ஏற்கத்தக்கதாய் அமைகின்றதாம். இத்தயவின், த-அகண்டாகாச வெளிநிறை அருட்பெருஞ்ஜோதியைக் குறிக்கிறது. இது சத்துப்பொருள் கொண்ட இறைவண்ணமானதாம். அந்த அருட்பெருஞ் ஜோதி அகண்ட வெளியில் தனியொரு ஆன்ம அணுவாயுள்ளதே யகரமாம். இந்த ஆன்மாவுக்கு வு-கரச்சேர்க்கையால் நிறை தயவு அனுபவம் உண்டாகி ஆனந்த வாழ்வு நிலவுவதாம். எனவே இத்தயவுதான் கடவுளின் நிறை உண்மை கொண்டு மனிதனாகி (மன்+நிதன்) அழிவற்ற நித்திய வடிவினன், மன்+இதன் = நிலைத்த இன்புருவினன், என்று விளங்கும் உண்மையைச் சுட்டுகின்றதாம். ஆகையால் சுத்த தயவுநெறி, அகமிருந்து, நிறைதயா இன்பவாழ்வாய் விளங்கும் சுத்த சன்மார்க்கமே.

### தயவு நெறி முறை

சுத்த சன்மார்க்கம் மனிதனை இறவா நிலையில் இருத்தி, நிறையின்போடு என்றென்றும் வாழச் செய்வதாம். இதற்குத் தயாவொழுக்கம், தயாவிசாரம், தயா இன்ப வாழ்வு எனும் மூன்று நிலைகள் உள்ளன. இவற்றால் அடையப் பெறுவது சுத்த தயா இன்ப வாழ்வாம். இவ்வொழுக்கமும், விசாரமும், வாழ்வும் பற்றி இங்கு குறிப்பாம்.

(அ) தயாவொழுக்கம் : ஜீவ தயாவொழுக்கம் தான் நம் சுத்தநெறியின் முதற்படியாகும். இதனால், தேகேந்திரியத்திலும், மனோகரணத்திலும், ஜீவ ஆன்மாவிலும் தயவு ஒளிசேரும். நமது அகத்தும், புறத்தும் நன்மையே விளைவு கொள்ளும்.

(ஆ) தயாவிசாரம் : கடவுள் உண்மையும் நமது உண்மையுமான தயவு விளக்கத்தை தயவோடிருந்து கொண்டு செய்யும் விசாரத்தால் உள்ளுற அறிந்து தெளிவு பெற்று விளங்கலாகும்.

(இ) தயா இன்பம் : தயவு நிலையைச் சிரநடு சிற்றம்பலத்திற் கண்டு நின்று, சூழ்ந்தவர்க்குத் தயவோடு உயிர் விளக்கத்தாலும் அறிவு விளக்கத்தாலும் இன்பு செய்து விட்டு உளநிறை மகிழ்வோடு உள் நின்று ஒளிர்வதே தயா இன்பம் பெறும் முறையாகும். இத்தயா இன்பக் குறிக்கோளோடுதான், கொலை புலை தவிர்த்த, தேகபோக இச்சையற்ற வாழ்வில் நாளும் முன்னேறி வரல் வேண்டும். அகமிருக்கும் தயா அமுதம் பெருகப் பெருக நித்தியமான கடவுள் தயா இன்ப வாழ்வு சூழுடலையும் சுத்த தயா இன்புருவாய்த் திகழச் செய்யும்.

மேற்படி சுத்தசன்மார்க்கத்தையே, நன்கு அறிந்து எவரும் ஏற்றுப் பயன் அடையவேண்டும். இந்நெறியை அறிந்து ஏற்றுக் கொள்ளும்போது இதுவரை நாம் பின்பற்றி வாழ்ந்து வந்ததை எண்ணும்போது, எவ்வளவு அறியாமையில் அவத்தைப்பட்டு அழிந்து கொண்டிருந்தோம் என்பதையுணர்வோம். பழநெறி முறையால் மனித சமுதாயம் உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் தயவில்லாக் கொள்கை கோட்பாடுகளால், சிறு இன்ப லட்சியங்களால், வேற்றுமை எண்ணங்களால் துன்பமே விளைந்துள்ளதெனக் காண்கின்றோம்.

நம் சுத்த தயவுப்பதி நம் ஆன்ம ஆலயத்தில் இருந்து, நம்மையும் (தய ஆக) உடன்கொண்டு, தயவு புரிகின்றார். அவருடைய ஆணைப்படியே நம்மைச் சூழ ஒவ்வொருவரும், ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு சூழ்நிலையும் வருகின்றதை அறிகின்றோம். மேலும் நம்பதியே, எங்கும் நிறைந்துள்ளவராதலின் அப்படி நம்மைச் சூழவரும் எது ஒன்றிலும் அவரே இருந்து அதுஅதுவாகத் தோற்றங் காட்டி நம்மைத் தயா இன்பம் பெறச் செய்ய வந்துள்ளதாய்த் தெரிந்து கொண்டு, நாமும் தயவோடு எதிர்கொண்டு வாழ்வளித்தலே முறையாகும். எதிர்ப்படும் எவரையும் புறநோக்காகக் காண்பதோடு, உள்நின்று ஒளிரும் பதியின் புற நிலையாகவே கண்டு ஆவன செய்திடல் நம் கடமையாம்.

நாம் காண்கின்ற எந்த மனித வடிவிலும், மனத்தால் கருதுகின்ற எவர் வடிவிலும், கற்பனா தெய்வ வடிவங்களிலும், பிற எவ்வுயிர் வடிவிலும் உள்ளீடாய் இருக்கின்றது நம் தயாபெரும்பதி ஒருவரே எனவும், அவரது ஏகதேச விளக்கமே, எங்கெங்கும் வெளியுற்று ஒளிர்வனவாக உண்மையாய் உணர்ந்து தயுவ செய்வதே நம் கடமையாம். சுத்த சன்மார்க்க அன்பர்கள் எங்கும் அருட்பெருஞ்ஜோதியை அல்லது தயாபெருஞ் ஜோதியை உண்ணின்று கண்டு போற்றுதல் வேண்டும். பிற புறத் தெய்வங்களைக் காணும்தோறும் உள்ளொளியை மறவாது பற்றிநின்று விருப்பு வெறுப்பின்றி தயவோடு நடந்து கொள்ள வேண்டும். தயவில்லாத எச்செயலும் தெய்வ வழிபாடாகாது. காலத்தையும் பொருளையும் உகைச் சூழலையும் தயவு வாழ்வுக்கே பயன்படுத்தி வரல் கடவுளாணையாகும்.

நமது திருவருட்பிரகாச வள்ளலார் தயவு மிகவுடையவராய் இருந்து சத்விசாரத்தால் அகத்தே அருட்பெருஞ்ஜோதியைக் கண்டார். அதனால் எவ்விடத்தும் உண்மை கண்டு அருள் பெருக வாழலானார். முன்னம் பழநெறிகளின் தொடர்பால் தெய்வத்தினிடத்து மிகு பக்தியும், ஜீவர்களிடத்துப் பெருந்தயவும் கொண்டு வாழ்ந்த போது பக்திப் பாடல்கள் ஆயிரக்கணக்கில் பாடினார்; துதித்தார். சுத்த நெறி சார்ந்த பின்னரே எல்லாவற்றிற்கும் உள்ளொளியான அருட்பெருஞ் ஜோதியையே கண்டு போற்றலானார். நம்மையெல்லாம் இந்தச் சுத்தநெறியையே ஏற்க வேண்டுகின்றார். மற்ற நெறிகளால் நன்மை இல்லை. அதற்குச் சான்றாகத் தன்னையே எடுத்துக்கொண்டு மேல் நிலைக்கு வரும்படி கூறுகின்றார். ஆதலின் திருவருட்பாவை ஓதிவரும் அன்பர்கள் முதல் ஐந்து திருமுறைகளில் பற்று கொண்டு பழ நெறியில் நின்றுவிடக்கூடாது. ஆறாந் திருமுறையை சுத்த சன்மார்க்க லட்சியத்தோடு பயின்று தெளிந்து ஏற்று வாழ்தல் வேண்டும்.

**தீயினில் பக்குவம் சேர்குணம் இயற்குணம்**
**ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி (456)**

சுத்த சன்மார்க்கத்தின் உண்மையைப் புரிந்து கொள்ளாமல் பழையனவற்றோடு வைத்து எண்ணிக் கொண்டும், பொருளைத் திரிபுபடுத்திக் கூறிக் கொண்டும் இருக்கின்றனர் பலர். புன்மார்க்கத்தவர் போல வேறு சில புகன்றே புத்தி மயக்கடையாதீர் என்று அன்றே கூறினார். இன்றும் அம்மருள்நிலை மாறவில்லையே! சுத்த சன்மார்க்கம் என்றால் என்ன என்று கேட்கின்ற அன்பர்களுக்குப் பதில் கூறித் தெளிவு செய்ய யார், எங்கே இருக்கின்றார் என்று தேட வேண்டியிருக்கின்றது. மிகுதியாக ஆராய்ந்தும், மணிக்கணக்கில், நாட்கணக்கில் விரிவுரை செய்து கொண்டும், கட்டுரைகள் வரைந்து கொண்டும் இருக்கும் அன்பர்கள் மூலம் சுத்த சன்மார்க்க விளக்கம் வெளியாகுமா, வெளிவருமா என்ற பார்த்துப் பார்த்து மனம் மறுகுகின்றனர் ஒரு சில சன்மார்க்கத் தொண்டர்கள், திருவருளே அதனைத் தயவோடு வெளியிடத் தூண்டி உதவியதால் ஒருவாறு இங்கு இதனைக் குறிக்க நேர்ந்தது, இதனைக் கொண்டு உள்ளுணர்ந்து சார்ந்து நின்று திருமுன் விண்ணப்பம் செய்யும் அன்பர்கள் உண்மையை நேரடியாக்க கண்டு கொள்ளலாம். ஆறாந்திருமுறைத் துதிபாடல்களைப் புருவநடுவிலிருந்து. சிரநடுச் சிற்றம்பலத்தில் அருட்பெருஞ் ஜோதியை எழுந்தருளப் பண்ணிப் போற்றி, உண்மையைக் காட்டிக் கூட்டி வைக்கும்படியாக வேண்டிக் கொண்டிருந்தால் நாளடைவில் உண்மை எல்லாம் அறிந்து அடைந்து பயன் பெறலாம்.

தயவுமயமாக உள்ளிருந்து வாழ்வதுவே சுத்த சன்மார்க்க நெறிமுறை என்பதைத் தெளிவுபெறக் கொண்டு இடையறாது மறவாது செயலோடு வாழ்தல் வேண்டும். கையறவில்லாது நடுக்கண் புருவப்பூட்டு என்ற வாசகமே இந்நெறிக்கு விளக்கம் தருவதாம். கையறவு என்றால், சோம்பல், செயலற இருத்தல்; அப்படிச் சோம்பியில்லாது லலாடத்தில் ஒருமையுற்று இருந்து கொண்டு தயவுச்செயல் புரிந்து கொண்டிருப்பதுவே இங்கு சுட்டப்படுகின்றதாம். ஆகையால் ஒவ்வொருவரும் அக அம்பலத்திலிருந்து பிரிவற விளங்கிக் கொண்டு தயா இன்ப வாழ்வு வாழவேண்டும். இது சுத்த சன்மார்க்க வாழ்வு முறையாம். எல்லோரும் இந்நெறி கொண்டு இன்புற்று விளங்குவார்களாக. அகமிருந்து விரிந்து விளங்கிக் கொண்டிருக்கும் அனக நெறியும் இதுவாகும்.

மேற்கொண்டு விளக்கங்களை சாகாக்கல்வி என்ற நூலில் காண்க. (பக். 16-26)

---

## சென்னை வேளச்சேரி

# நித்ய தீப தருமச்சாலை

கடந்த 8 ஆண்டுகளாக தினசரி நூற்றுக்கணக்கானவர்களின் பசியைப் போக்கக் கூடிய நித்ய தீப அன்ன தருமச்சாலைக்கு வருகை தந்து, ஜோதி தரிசனம், மாத பூச நாளில் 6 திரை நீக்கி ஜோதி தரிசனம் செய்து, அருளின்பம் பெற தங்களையும், தங்கள் குடும்பத்தையும் அன்புடன் அழைக்கிறோம்!

**அடுத்த மாத பூச ஜோதி தரிசனம்**
**23.07.2017 (ஞாயிற்றுக்கிழமை)**
**இரவு 8.00 மணிக்கு**

**இடம் : நித்ய தீப தருமச்சாலை**

7/8, புத்தேரிக்கரைத் தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை - 600 042

**தீயிடை உருக்கியல் சிறப்பியல் பொதுஇயல்**
**ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (458)**

# ஓர் ஏழை மாணவனின் கல்விக்கு உதவிட வாருங்கள்...!

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டையின் சார்பில் ஆண்டுதோறும் கல்வி உதவியாக இதுவரை 664 மாணவச் செல்வங்களுக்கு ரூ. 35,000,00/- க்கும் (35 லட்சம்) மேலாக கல்வி உதவித்தொகை வழங்கி உள்ளது.

## தொடர்ந்து 8 ஆண்டுகளாக...

இந்த ஆண்டும் படிப்பில் நன்றாக தேர்ச்சி பெற்ற பல நூற்றுக்கணக்கான கிராமப்புற ஏழை மாணவர்கள் தீபம் அறக்கட்டளைக்கு விண்ணப்பித்துள்ளனர். இந்த ஏழை மாணவர்களின் எதிர்கால வாழ்வாதாரத்திற்காக 09.07.2017 அன்று கல்வி உதவி வழங்க திருவுள்ளம் கொண்டுள்ளோம். தயா உள்ளம் கொண்ட ஆன்மநேய உள்ளங்களே, தாங்களும் இப்புண்ணியத் தொண்டில் பங்கு பெற்று கல்வி உதவியை வாரி வழங்கிட வேண்டுமாய் தங்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

Donations may be sent by crossed cheque to :

**Deepam Trust**

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch, DEEPAM TRUST**

**Current A/c. No. : 30265475129 / IFSC Code : SBIN0001055**



இங்ஙனம்

**நிர்வாகிகள்** மற்றும் **அறங்காவலர்கள்**

**தீபம் அறக்கட்டளை.**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானின் கருணையிலே...



சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில்
தினந்தோறும் தயாராகும் அறுசுவை உணவின் அற்புதக்காட்சி



பல்லாவரத்தில் உள்ள பார்வையற்றவர்களுக்கு வழங்குவதற்கு தயாராக உள்ள
உணவுப் பொட்டலங்கள் (தீபத்தின் வடிவில்).

RNI : TNTAM/2010/35284 R.No.TN/CC(S)Dn/412/17-19

"REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT
UNDER WPP NO.TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
Posted at Patrika Channel, Egmore, Chennai - 8. | Date of Publication : 20th of Every Month

கொளுத்தும் கோடை வெயிலுக்கு இதமாக தொடர்ந்து 8 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கானவர்களுக்கு
நீர் மோர் வழங்கும் தங்கநாராயணா சூப்பர் மார்கெட் உரிமையாளர் தயவு. செல்வராஜ் அய்யா அவர்கள்



To
Shri / Smt / Dr

Posted at Patrika Channel
Posted on 27-6-2017
Egmore, Chennai - 8

If undelivered Please Return to :

**DEEPAM TRUST**

(REDG. No. - 2035/07)

No. 30, Drowapathi Amman Koil Street (Next to Mosque), Velachery, Chennai - 600 042. Phone : 044 - 2244 2515
Cell : 94440 73635 | E-mail : admin@deepamtrust.in | Web : www.deepamtrust.in

Published by : M. Balakrishnan on behalf of Deepam Trust,
No.30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and
Printed by RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015.
Editor : M. Balakrishnan